விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | கார்த்திகை 29 | ராபி ஆகி 1 | இதழ் 307
யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 14-12-1985

## சுழிபுரத்தில் மூளைக்காய்ச்சல்?

(பண்டத்தரிப்பு)

சுழிபுரத்தைச் சேர்ந்த மூன்று பேருக்கு மூளைக்காய்ச்சல் நோய் எற்பட்டிருப்பதாக பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் தீவிர தடுப்பு நடவடிக்கைகளை யாழ். பிரதேச மலேரியா தடை இயக்கத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

சுழிபுரம் நெ(..)யான் என்ற இடத்தைச் சேர்ந்த இருவரும் சுழிபுரம் பத்தாவத்தை என்னுமிடத்தைச் சேர்ந்த பெண் ஒருவரும் இந்த நோயினுல் பீடிக்கப்பட்டிருப்பதாக இரத்தப் பரிசோதனை ஒன்றின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

மூளைக்காய்ச்சலினுல் பீடிக்சப்பட்ட மேற்படி மூன்று பேரும் மன்னுர் பகுதியிலுள்ள உயிலங்குளம், வவனியா பகுதியிலுள்ள வவனிக்குளம் ஆகிய இடங்களிலுள்ள கமங்களில்

(5ம் பக்கம் பார்க்க)

● வடக்கு ● கிழக்கு மாகாணங்கள்

# நடவடிக்கை பகுதிகளாக மாறப்போகிறது!

## சபையில் லக்ஷமன்

### பிரதேச அபிவிருத்தி அமைச்சை மூடிவிடுமாறும் யோசனை

(சபையிலிருந்து பி. ராஜரட்ணம்)

**''வடக்கு- கிழக்குப் பகுதிகள் நடவடிக்கைப் பகுதிகளாக மாறப் போகின்றன. இதனுல் பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல், இந்து கலாசார அமைச்சினுல் எந்தவிதப் பயனும் ஏற்படப் போவதில்லை'' என்று அத்தனகலைத் தொகுதி எம். பி. திரு. லக்ஷமன் ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் நேற்றுப் பேசுகையில் வலியுறுத்திச் சொன்னுர்.**

மேற்படி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக்குழு விவாதத்தில் திரு. லக்ஷமன் ஜெயக்கொடி உரைநிகழ்த்தினுர்.

''இந்த அமைச்சு வடக்கு கிழக்குப் பகுதிகளில் இயங்க முடியாமலிருக்கிறது. இதனுல் இந்த அமைச்சை மூடிவிட்டு, பாதுகாப்பு அமைச்சுடன் இணைத்துக்கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக்கொண்ட திரு. லக்ஷமன் ஜெயக்கொடி, இந்த அமைச்சர் வடபகுதிக்கு இன்று போக முடியாத நிலையிலிருக்கிருரே என்றும் வருத்தம் தெரிவித்தார்.

பிரதேச அபிவிருத்தி, தமிழ்மொழி அமுலாக்கல், இந்துகலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரை பேசு

(5-ம்டக்கம் பார்க்க)

## ஒய்வூதியம் இன்று, நாளை இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலைய விடுதியில் இயங்கும் இலங்கை வங்கிக்கிளையில் இன்றும், நாளையும் ஓய்வூதியம் வழங்சப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (மூன்ரும் பக்கத்தில் தெரிவித்த விபரம் முன்னர் வந்த செய்தியாகும்.)

## வடக்கில் ரயில்கள்ஓடாது!

[கொழும்பு]

வடபகுதிக்கான ரயில் சேவைகள் மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்த 'இன்ரசிற்றி' ரயிலில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தே ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. மறு அறிவித்தல்வரை கொழும்புக்கும், அநுராதபுரத்துக்குமிடையிலான ஒரே ஒரு ரயில் சேவை மட்டுமே நடைபெறும். [ரா]

## குண்டுகள் வைத்து தகர்ப்பு

(மட்டக்களப்பு)

ஆயத்தியமலை, கரடியனுறு விவசாய உற்பத்தி நிலையங்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன.

## 'ஆமி ஆமி' என்று கூறி ஓடியபோது ஒருஇளம்பெண்விபத்தில்பலி

[யாழ்ப்பாணம்]

''யாழ். நகரில் நேற்றுக் காலை மக்சள் 'ஆமிஆமி' என்று சொல்லிக்கொண்டு சிதறி ஓடியபோது, தாயாருடன் ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்க வந்த விமலாதேவியின் நெஞ்சின் மீது மினிவான்ஒன்று ஏறிச் சென்றது''

மானிப்பாயைச் சேர்ந்த திருநாவுக்கரசு விமலாதேவியின் (18 வயது) மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது. யாழ். பதில் நீதவான் ஏ. அன்ரனி மரண விசாரணை நடத்தினுர்.

இறந்தவர் தம்பியாருக்கு மருந்துவாங்க தாயாருடன் வந்து யாழ். பஸ் நிலையத்தில், டஸ்ஸிலிருந்து இறங்கியபோது 'ஆமி ஆமி' என்று மக்கள் ஓடியதாகவும், அப்போது மினிவான் ஒன்று இறந்தவரின் நெஞ்சின்மீது ஏறியதாகவும், அந்த மினிவான் நிற்காமல் சென்றுவிட்டதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அங்கு தாயாரும் மயக்கமடைந்துவிட்ட

(5-ம் டக்கம் பார்க்க)

## ரோந்து சேவை

[வவனியா]

வவனியாவில் ஆயுதப்படையினர் உழவு இயந்திரங்ளிலும் ரோந்து சுற்றிவருகின்றனர். (ய - மா)

## சக்திவாய்ந்த கவசவண்டி

(கொழும்பு)

வீதியில் புதைத்து வைக்கப்படும் கண்ணிவெடிக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய கவசவாகனங்கள் ஆயுதப்படையினரின் ரோந்து சேவைக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஒரு கவசவாகனம் 25 லட்சம் ரூபா பெறுமதிவாய்ந்ததாகும்.

காட்டிலும், மேட்டிலும், சகதியிலும் இக்கவசவாகனங்கள் செல்லக்கூடிய சக்திவாய்ந்தன என்றும் தெரிவிக்கப்படுகிறது. [ய-மா]

## இராமேஸ்வரத்தில் கடற்படை, விமானத் தளம்

(சென்னை)

இராமேஸ்வரம் பகுதியில் பாரிய அளவிலான கடற்படை விமானத்தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இராமேஸ்வரம் கரைக்கப்பால் பயனுள்ள விதத்தில் ரோந்துப்பணியை மேற்கொள்வதற்கு வசதியாகவே இந்தத் தளம் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை 'ஔவையார்' என்ற புதிய கடற்படைப் படகு இராமேஸ்வரம் பகுதியில் ரோந்துசேவையில் ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே மூன்று படகுகள் ரோந்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. [ரா]

## யாழ்ப்பாணத்தில் நேற்று துக்கம் அனுஷ்டிப்பு!

(யாழ்ப்பாணம்)

**அரியாலையில் இடம் பெற்ற சம்பவத்தில் பலியான மூன்று தமிழ்த் தீவிரவாத இளைஞர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ். மாவட்டத்தில் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.**

தமிழீழ மக்சள் விடுதலைக் கழகம்(புளட்) விடுத்தவேண்டுகோளுக்கமைய இத்துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

(-5ம் பக்கம் பார்க்க)

## கான்ஸ்டபிள் பலி!

(மதவாச்சி)

மதவாச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்றுக்காலை நடந்த அசம்பாவித சம்பவத்தில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் பலியானுர்!

இருபொலிஸ் கான்ஸ்டபிள்களிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானுர்.

## சீறிப்பாயும் குண்டு! ஏருவூரில் கண்டுபிடிப்பு

(ஏருவூர்)

ஏருவூர் பகுதியிலுள்ள கொடுவாமடு எனுமிடத்தில் புதுவிதமான மூன்று குண்டுகளை ஆயுதப்படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

'கிலேமோர்' எனப்படும்

(5-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் புயல் அபாயம்!

(சென்னை)

வங்கக் கடலின் தென் மேற்குத் திசையில் சென்னைக்கு தென் கிழக்கே 200 கிலோ மீட்டர் தொலைவில் புயல் தூர்க்கம் ஏற்பட்டுள்ளதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

இந்த புயல் அடுத்த 36 மணி நேரத்தில் கரையைக் கடக்கலாமென்றும்; அப்பொழுது தமிழக சடலோரப் பகுதிகளில் 100-120 கிலோ மீட்டர் வேகத்திலும், ஆந்திரப் பிரதேசத்தில் 55-65 கிலோ மீட்டர் வேகத்திலும் பலத்த காற்று வீசப்படலாம் என்றும்இதனுல்தமிழக

(8ம் பக்கம் பார்க்க)

# 'லலித்' கூற்றுக்கு 'சிவா' கண்டனம்!

(சென்னை)

''தமிழ்ப்போராளிகளின் தாக்குதல்களை அடுத்தே ராணுவத்தினர் எதிர் நடவடிக்கைகளில் இறங்க நேரிடுகிறது என்றும், அதனுல் பொதுமக்கள் பாதிப்புக்குள்ளாகினுர்கள் என்றும் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித்அத்துலத்முதலி கூறியிருப்பதை, தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர் திரு. எம்.சிவசிதம்பரம் கண்டித்துள்ளார்.

''இலங்கை ராணுவம் அப்பாவிப் பொதுமக்களைத் தாக்கிக் கொலை செய்வது பற்றி இந்திய லோகசபையில் உறுப்பினர்கள் காரசாரமாக கருத்துக்கள் வெளியிடப்பட்டிருப்பது திரு அத்துலத்முதலிக்கு பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஆதனுல் ராணுவத்

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

(1) பருத்தித்துறை நெல்லண்டை உடையார் வீதியில் 20 காணிகள் மொத்தம் பரப்பு 60தும், (2) பருத்தித்துறை புலோலி மேற்கு தம்பசிட்டி வீதியில் வீடு, கிணறு, வளவு 3½ பரப்பும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டியவர்: கு. கணபதிப்பிள்ளை; Attorney at Law, புலோலி மேற்கு, பருத்தித்துறை. 2293

புதிய PL-4 ரக லேத் மெசின் விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 2290

வலம்புரி சங்கு:தெய்வீக சக்திவாய்ந்த வலம்புரிச்சங்கு, ஆலய பூசை ஆராதனைக்கும், இல்லங்களில் இலட்சுமிகடாட்சம் நிலவுவதற்கும் மாபெரும் பொக்கிசம். உடன் விற்பனைக்குண்டு: தாஸ், மாணவர் அறப்பணி நிலையம். 59, மீனுட்அம்மன் வீதி, பண்ணை. 2319

Bairaha Farms புரொயிலர் குஞ்சுகள் 17-ந் திகதி, 24-ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 2324

சட்டரிங் பலகைகள் 1400 சதுரஅடி (Shuttering planks), 225 மூட்டுத் தடிகள், தளபாடங்களுக்கேற்ற யாவறணைப் பலகைகள், 6 கதவு நிலைகள், 6 ஜன்னல் நிலைகள் ஆகியன சகாய விலைகளில் உடனே விற்பனைக்குள்ளன. வேலை நேரங்களில் தொடர்பு கொள்ளவும்: இல. 10, குருேசற் லேன், [கச்சேரி நல்லூர் வீதி],யாழ்ப்பாணம். [கச்சேரியிலிருந்து 150 யார்] [2370]

## விற்பனைக்கு

அடைவுகடைக்கு ஏற்ற கம்பிகள் பூட்டிய கவுண்டர் விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிட்டு விலை விபரம் பேசிக்கொள்ளலாம். முகவரி: வே. இராசையா, 581/1, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 2321

மிளகாய்த் தோட்டம்: நாவற்குழி சந்தியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் மைலியா தோட்டப் பகுதியில் 11 பரப்பு மிளகாய்த் தோட்டம் [நடப்பட்டுள்ளது) விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும் முகவரி: நாகலிங்கம் கனகரத்தினம், நாவற்குழி அல்லது 52, வைமன் வீதி,யாழ்ப்பாணம். (2350)

தெல்லிப்பழையில் பிரதான வீதியிலிருந்து 200 யார் தூரத்தில், 2 வீடுகள் கட்டக்கூடியதும், முதிர்ந்த பனைகளுடன் கூடியதுமான 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பின்வரும் முகவரிகளில் ஒன்றில் தொடர்பு கொள்ளவும். சரு சேது சேவிஸ், சுன்னுகம் (ஜெற் மோட்டர்ஸ் அருகே). or Dyn Ads, 476, பிரதான வீதி, சுண்டிக்குழி [சென் ஜோன்ஸ் முன்பாக] [2369]

வீட்டுத் தளபாடங்கள், வெளிநாட்டுக் கிளாஸ் வகைகள், தையல் மெஷின், குளிர்சாதனப் பெட்டி, துவிச்சக்கர வண்டிகள், மிருதங்கம், ரி.வி, கஸற் றேடியோக்கள், உயர்தர வகுப்புக்காய வரலாற்றுப் புத்தகங்கள், இன்னும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன் C/O திரு. அம்பலவாணர், திருநெல்வேலி வடக்கு. [திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில் உள்ளது] [2371)

## தேவை

றெமிங்டன் New Key Board எரிக்கா Key Board தமிழ் தட்டச்சில் அடிக்கக் கூடியவர் தேவை. நிர்வாகி- சங்கர், J. E. C. மேல்மாடி, (சாந்தி சினிமா முன்), யாழ்ப்பாணம். 2125

யாழ்.நகரில் உள்ள பிரபல ஸ்தாபனம் ஒன்றிற்கு பாராமரிப்பு வேலையும் மற்றும் கையுதவி வேலையும் செய்யக்கூடிய ஒருவர் தேவை. இரவில் தங்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும். நடுத்தர வயதுடைய/ஓய்வுபெற்றவர் விரும்பத்தக்கது. முன் அனுபவத்துடன் விண்ணப்பிக்கவும்.விளம்பர இல. 2358, C/O ஈழநாடு. (2358)

## மணப்பந்தல்

இந்து வேளாள 37 வயதுள்ள அழகு, நற்குணம் ,கல்வியறிவு நிரம்பிய பெண்ணுக்கு வரன்தேவை. வரன், அரச உத்தியோகம் பார்ப்பவராக இருக்கவேண்டும். சீதனமாக யாழ் நகரில் வீடு, ரொக்கம், நகை வழங்கப்படும். ஜாதக விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2337, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [2337]

## வாடகைக்கு

சகல நவீன வசதிகளுடன் வீடொன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு: Dr.Mrs. அருளம்பலம், 12/1, அருளம்பலம் லேன், அரியாலை. (2264)

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

---

# COMMERCE DAY CLASS

ஆரம்பம்: 16-12-85 காலை 8 மணி
(வாரத்தில் 20 வகுப்புகளிற்கு கூடுதலான வகுப்புக்கள் நடைபெறும்)

விபரங்கட்கு:
**New Master Institute,**
BMC LANE, JAFFNA.

---

## உங்கள் வெளிநாட்டு பயணத்திற்கு

அமெரிக்கா, கனடா, மேற்கு ஜேர்மனி

மற்றும் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள தொடர்பு கொள்ளவும்.

# Travel Link Associates.

18 - 1/2 - Baillie Street
(Mudalige M. V.)
FORT.
T. P. 545657. (2354)

---

## L. P. GAS
## பாவனையாளர்களின் கவனத்திற்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் எல்லா நாட்களிலும் உடனுக்குடன் காஸ் டிலிவரி செய்து கொடுக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
31, மானிப்பாய் வீதி - யாழ்ப்பாணம்.
[2356]

---

## 86 A/L Day Class

3-ம் பிரிவு
ஆரம்பம்: 16-12-85 திங்கள் காலை 11 மணி
3-ம் பிரிவு

## 86 A/L Weekend Class

ஆரம்பம்: 15-12-85 ஞாயிறு காலை 9-30 மணி

## Paper Class

1-ம் பிரிவு
ஆரம்பம்: 22-12-85 ஞாயிறு நண்பகல் 12-00 மணி

விபரங்கட்கு:
**NEW MASTER INSTITUTE**
BMC L NE, JAFFNA.

---

## பாவனையாளர்களின் நலன் கருதி

தேசிய கடதாசிக் கூட்டுத் தாபனத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட
**(கிறீம் மோவ் பேப்பர்) கொப்பிகள்**

பின் வரும் விலைகளில் விற்பனைக்கு உள்ளது.
முற்பணம் கட்டியவர்களுக்கு இம்மாதம் 23-ந் திகதி முதல் விநியோகம் செய்யப்படும்.
முற்பணத்தை காசாக 18-ந் திகதிக்கு முன்னர் கட்டலாம்.

| | மொத்த விலை | | சில்லறை விலை |
|---|---|---|---|
| A-5-40 Pages | -137/- | per 100 Units | 1/45 |
| A-5-80 Pages | -263/- | per 100 Untis | 2/75 |
| A-5-60 Pages | -280/40 | per one Gross | 2/05 |
| 40 Pages(Imperial) | -150/95 | per one Gross | 1/10 |
| 80 Pages(Imperial) | -272/25 | per one Gross | 2/00 |

120, 160, 200, 240 பக்கங்கள்
மொனிற்றேஸ் கொப்பிகளும் உள்ளன.

# அம்பலவாணர் அன் சன்ஸ்

(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள்)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி
மேரி மெற்றில்டா வதன பாஸ்கரன்



மலர்வு: 05-08-62
மறைவு: 14-11-85

★

பூத்துநின்ற புதுமலரும்
மறைந்ததம்மா
காத்துநின்ற கதிரவனும்
சாய்ந்ததம்மா
தோற்றுவித்த குல
விளக்கு ஏங்குதம்மா
தோன்றுயோ மீண்டும்
என்று வாடுதம்மா

அன்னுரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்ட யாவருக்கும் நன்றி.
வதன பாஸ்கரன்,
தகப்பன்/மேபிள் குடும்பத்தினர்.
இல. 7, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். [2345]

உலகச் செய்திகள்

## அமெரிக்க விமான விபத்து

# லெபனான் இஸ்லாமிய ஜெஹாட் இயக்கம் உரிமைகோருகிறது

லண்டன், டிச-13

**கனடாவின் நியுபௌன்லாந்திலுள்ள 'கன்டர்' விமான நிலையத்தில் இடம்பெற்ற அமெரிக்க விமான விபத்துக்குத் தாமே பொறுப் பென்று லெபனானின் 'இஸ்லாமிய ஜெஹாட்' தீவிரவாத இயக் கம் உரிமைகோரியுள்ளது. இந்த இயக்கம் பெய்ரூட்டில் தொலை பேசி மூலமாக அமெரிக்கத் தூதரகத்திடம் இதனைத் தெரிவித் துள்ளது.**

அமெரிக்காவில் அந்த விமா னம் தரை இறங்கும்போதே அது வெடித்துச் சிதறும் வகை யில் குண்டு வைக்கப்பட்டிருந்த தாகவும், ஆனால் அமெரிக்கா சேருமுன்னர் அக்குண்டு வெடித்துவிட்டதாகவும் அந்த இயக்கம் மேலும் தெரிவித்துள் ளது.

சுமார் 258 பேர் அவ்விமா னக் குண்டுவெடிப்பில் கொல் லப்பட்டுள்ளனர் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. இவர்களில் எட்டுப் பேர் மட்டுமே அந்த டி. ஸி-8 விமானத்தின் சிப்பந்தி கள். ஏனையவர்கள் அனைவரும் அமெரிக்க இராணுவ வீரர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் மத்திய கிழக்கில் ஐ. நா. அமைதிப் படையில் பணியாற்றிவந்தனர்.

மத்திய கிழக்கில் அமெரிக் கச் செல்வாக்கை எதிர்க்கும் வகையிலேயே இந்நாசவேலை மேற்கொள்ளப்பட்டிருக்க லாம் என்று தெரிவிக்கப்பட் டது. [கி]

### பலியான வீரர்கள்

## கிறிஸ்மஸ் பண்டிகைக்காக தாயகம் வந்தனராம்!

லண்டன், டிச-13

நேற்று கனடாவில் விபத் துக்குள்ளான விமானத்தில் பலியான அமெரிக்க வீரர்கள் கிறிஸ்மஸ் பண்டிகைக்கா கத் தாயகம் திரும்பிக்கொண் டிருந்தனராம்.

அமெரிக்காவில் இவர்கள் தரையிறங்கவேண்டிய விமான நிலையத்தில் இவர்கள் வரு கைக்காக இவர்களது உற வினர்களும், நண்பர்களும் ஆவலுடன் காத்திருந்தனர்.

மகிழ்ச்சி ஆரவாரத்துடன் அவர்கள் காணப்பட்டனர். ஆனால் இந்த விபத்துப்பற்றி அறிவிக்கப்பட்டதும் அவர்கள் அலறித் துடிக்கத் தொடங்கி னர்.

அவ்விமான நிலையத்தில் கம் பீரமாக அந்த வீரர்களை வர வேற்பதற்குப் பறக்கவிடப் பட்டிருந்த அமெரிக்கக் கொடி கள் யாவும் திடீரென அரைக் கம்பத்திற்கு இறக்கிவிடப்பட் டன.

அமெரிக்க இராணுவத்தைச் சேர்ந்த சிப்பாய்கள் கவலை யால் துடித்த தமது சகாக் களின் உறவினர்களை அமை திப்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர். (கி)

### விமானப் போக்குவரத்து

# 2000 பேர் இந்த ஆண்டில் விபத்துக்களில் மரணம்!

லண்டன், டிச-13

நேற்று இடம்பெற்ற நியு பௌன்லாந்து விமான விடத் துடன் இந்த ஆண்டின் இவ் விபத்து மரணங்கள் இரண்டா யிரமாக அதிகரித்துள்ளன.

இந்த ஆண்டிலேயே விமா னப் போக்குவரத்து வரலாற் றில் ஆகக் கூடுதலான விபத்து மரணங்கள் இடம்பெற்றுள் ளன என்றும் அறிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை நேற்றைய விப த்து அமெரிக்க இராணுவ விமானச் சேவையில் நிகழ்ந்த மிகக் கோரமானதெனவும் அமெரிக்க தரப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்த டி. ஸி-8 விமானம் நேற்று நியுபௌன்லாந்தின் 'கன்டா' விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காகத் தரை இறங்கியது. இவ்விமான நிலையம் கனடாவிற்குக்கிழக்கே அமைந்துள்ளது.

எரிபொருள் நிரப்பப்பட்ட தும் அந்த டி.ஸி-8 விமானம் மேலே கிளம்பியபோது ஓடு பாதையிலிருந்தும் 500 யார் களுக்கப்பால் தரையில்வீழ்ந்து தீப்பிழம்பானது.

எகிப்தின் கெய்ரோ விமான நிலையத்திலிருந்தே இந்தவிமா னம் தனது பயணத்தை ஆரம் பித்தது. (கி)

### வரிமோசடி

## இந்திய முன்னணி தொழில் அதிபரும், மகனும் கைது!

புதுடில்லி, டிச. 13

வரி மோசடி காரணமாக இந்தியாவின் முன் னணித் தொழிலதிபரும், அவரது மகனும் கைது செய்யப்பட்டனர்.

கலோஸ்க்கா (வயது 80) என்ற பிரபல பொறி யியல் நிபுணரும், அவரது மகன் ஆர். என். கலோஸ்க் காவுமே இந்த இருவருமாவர்.

திரு. கலோஸ்க்கா இந்திய பொறியியல் துறை யின் முன்னோடியாவார். இவர் இந்திய பொறியியல் கல்வியின் ஆரம்பகால மாணவர்களில் ஒருவராவார். அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் பொறியியல் கல்லூரி யின் பட்டதாரியாவார்.

இந்தியாவில் இவர் 'கலோஸ்க்கா' என்ற பெரும் பொறியியல் நிறுவனத்தை நடத்திவந்தார். இந்நிறுவனம் வரி ஏய்ப்பு மோசடிகளிலும், சட்ட விரோத அந்நியச் செலாவணிக் கொடுப்பனவுகளி லும் ஈடுபட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. இதனை யடுத்தே திரு. கலோஸ்க்காவும், அவரது மகனும் கைதானார்கள்.

இந்திய நிதியமைச்சர் திரு. வி. பி. சிங் வரி ஏய்ப்பாளர்களை தாம் தண்டிக்கப்போவதாக தமது பட்ஜெட் சமர்ப்பணத்தின்போது தெரிவித்தார். இத னடிப்படையிலேயே தற்போது கலோஸ்க்கா விவகா ரம் இடம்பெற்றுள்ளது.

திரு. கலோஸ்க்காவும், அவரது மகனும் நேற்று தலா பத்தாயிரம் ஸ்ரேர்லிங் பவுண்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். [கி]

## இன்று-நாளை ஓய்வூதியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொலிஸ் நிலைய விடுதியில் இயங்கும் இலங்கை வங்கிக் கிளையில் இன்று சனிக் கிழமையும், நாளை ஞாயிற்றுக் கிழமையும்வழங்கப்படவிருந்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் தவிர்க்கமுடியாத காரணங்க ளால் ஒத்திவைக்கப்பட்டுள்ள தாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் வழங் ப்படும் திகதி பின்னர் தெரிவிக்கப் படும். (மா)

## "சகலஅரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய்க!"

### வடபிரதேச தொழிற்சங்க கூட்டுக்குழு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

காவலில் வைக்கப்பட் டுள்ள அனைத்துத் தமிழ் சிங்களஅரசியல் கைதிகளையும் உடனடியாக எவ்வித நிபந் தனையுமின்றி விடுதலை செய்யு மாறு வடபிரதேசங்களின் கூட் டுக்குழு அமைப்பாளர் திரு. எஸ். விஜயானந்தன் நேற்று விடுத்த அறிக்கையில் அரசை வற்புறுத்தியுள்ளார். அவ் வறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

ஐக்கிய தேசியக் கட்சி, ஆட் சியதிகாரத்தைக் கைப்பற் றிய பின்பு தமிழ்மக்கள் பாரிய துன்ப துயரங்களுக்குள்ளாக் கப்பட்டு வருகின்றார்கள். அவ சரகாலச் சட்டம், பயங்கர வாதத் தடைச்சட்டம் போன் றவை தமிழ் மக்களையும், தொழிலாளி வர்க்கத்தையும் அதன் தலைவர்களையும் சிறைப் படுத்துவதற்கும், சித்திர வதைப்படுத்துவதற்கும் இச் சட்டங்கள் உபயோகப்படுத் தப்படுகின்றன.

லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகி யன கூட்டாக பொறளையில் நடத்தவிருந்த கூட்டத்தை அரசாங்கம் ரத்துச்செய்தது. இதனை எதிர்த்து சம்பந்தப் பட்ட கட்சிகளும், நவசமச மாசக் கட்சியும் பிரசாரம் செய்தன. இப்பிரசாரத்திலீடு பட்டபொழுது நவசமசமாசக் கட்சியின் பொதுச் செயலாள ரும், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனத்தின் ஆலோசகரு மான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின ஸ்ரீ லங்கா மக் கள் கட்சியின் பொதுச்செய லாளர் திரு. விஜயகுமாரண துங்கா உட்படப் பலர் கைது செய்யப்பட்டனர்.

காவலில் வைக்கப்பட்டுள்ள மற்றைய தமிழ், சிங்கள அர சியல் கைதிகளையும் விடுதலை செய்யுமாறும், பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற அனைத்து அடக்குமுறைச் சட் டங்களையும் உடனடியாக வாபஸ் பெறும்படியும் வட- பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு அரசை வற்புறுத் துகின்றது.

## "அகதிகளின் உள்ளங்களூடாக ஏசுபிறக்க வழிசெய்வோம்"

### ஒளி விழாவில் கருத்து

(உடுவில்)

"திருமலை, மட்டக்களப்பு, வவனியா போன்ற இடங் களில் இருந்து அகதிகளாகி யாழ்ப்பாணம் வந்துள்ள மக்களுக்கு உதவிகள் செய் வதன் மூலம் அவர்களின் உள்ளங்களினூடாக இயேசு பிறக்க வழி செய்ய வேண் டும்;"

மானிப்பாய் மெமோறியல் மகா வித்தியாலயத்தின் வரு டாந்த நத்தார் ஒளிவிழா நிகழ்ச்சிகளில் பிரதம அதிதி யாக கலந்து கொண்டுதேவா சீர்வாதம் வழங்கிய, மானிப் பாய் உதவிப் பங்குத்தந்தை வண. ஏ. ஜேசுதாஸ் இவ் வாறு கூறினார்.

மெமோரியல் மகா வித்தி யாலய அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் அழகரத்தினம் அரங்கில் நடை பெற்ற ஒளிவிழா நிகழ்ச்சி யில் வண. ஜேசுதாஸ் அவர் கள் மேலும் கூறியதாவது:

"இற்றைக்கு இரண்டா யிரம் ஆட்டுகளுக்கு முன்னரும் கிறிஸ்து பிறந்த சமூகம் சுதந்திரமற்ற அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்ட சமூகமாகவே விளங்கியது. இன்று இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் இருந்து அகதி களாகி யாழ்ப்பாணம் வரும் அகதிகளுக்கு நாம் தாராள மாக உதவுகின்றோம். ஆனால் யாழ்ப்பாணப்பகுதியில் இன் னல்கள் ஏற்படும் போது நம் இறைவனிடமே அகதி களாகப் போக நேரிடும்."

அதிபர் திரு. வி. பொன் னுத்துரை தமது தலைமை யுரையில் கூறியதாவது:" உல கில் அறியாமை அட்டூழியம் கொடுமை ஆகியன தோன்றும் போது மகான்கள் பிறப்பது இயற்கை, இயேசுபிரானும் தோன்றிய வேளையில் துன்பப் படும் மக்களுக்கு தன்னை அர்ப்பணித்து மகானாக மாறி னார். எம் மதத்வாராயிருப் பினும் ஒருவர் செய்யும் தொண்டுகளை மறவாது நினைவு கூருதல் அவசியம்."

உப அதிபர் திருமதி ப. மகாதேவா நன்றி நவின்றார். மாணவர்களின் கலை நிகழ்ச்சி களும் நடைபெற்றன.

## முஸ்லிம்லீக் ஆட்சேபம்

(கொழும்பு)

சம்மாந்துறை சிறுநீத்துக் கண்டம் என்ற பகுதியில் விவ சாயத்தில் ஈடுபட்டிருந்த முஸ் லிம்களை வெளியேறும்படி விடுக்கப்பட்டுள்ள உத்தரவை ஆட்சேபித்து அகில இலங்கை முஸ்லிம் லீக் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவுக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளது.

## இணக்க சபை அமைக்கின்றனர்

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரம் கிராமசேவை அலுவலர் பிரிவில் இணக்க சபை அமைக்கப்படவுள்ள அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை மாவிட்டபுரம் வடக்கு அ. மி. த. க. பாடசாலையில் நடை பெறவுள்ளது. கிராம சேவை அலுவலர் திரு.க. இராசதுரை தலைமையில் கூட்டம் நடை பெறும்.

## புளொட்டின் அஞ்சலிப் பிரசுரம்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளொட்) உறுப்பினர் களாக இருந்து கடந்த வருடம் காலமான வாமதேவன் ஞான கணேசன் (பாபுஜி), ச. ஜெய மனோகரன் (ரங்கன்) ஆகியோ ருக்கு முதல் ஆண்டு நினைவஞ் சலி செலுத்தி தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இரு அஞ்ச லிப் பிரசுரங்களை வெளியிட் டுள்ளது.

புதுக் கவிதை வடிவில் வெளி யிடப்பட்ட இந்த அஞ்சலிப் பிரசுரங்கள், நகரின் பல பாகங் களிலும் விநியோகிக் கப்பட்டன. (து)

## மணிவாக்கு

அமைதியுடனும் திடமாயும், புகழ்ச்சிக்கும், இகழ்ச்சிக்கும் செவிகொடாமல் வேலைசெய்யும் பக்தனே உண்மையில் அனைவரிலும் மேலானவன்.

—ராமகிருஷ்ணர்.

# நமது நோக்கு

## செத்தாரைப் போலத் திரியும் தலைமைத்துவம்

கனடாவில் முந்தநாள் நடந்த விமான விபத்தில் அமெரிக்க ராணுவத்துக்கு ஏற்பட்ட கதியும், யாழ்ப்பாணம் டச்கோட்டையிலிருந்து ராணுவம் வெளிவீதி உலாவுவதால் ஏற்படும் துன்பமும் ஒரு தரமானவை.

மேக மண்டலத்துக்கு மேலே விமானம் போய்விட்டால் அதன் வேகமான பயணத்துக்குத் தடையொன்றுமில்லை; அதேபோல் இலங்கை ராணுவ வீரருக்கு நிலத்தில்தான் பயங்கரவாதம்; நிலத்துக்குள்ளே காலன் கரந்திருக்கிருன்.

விமான சேவை தேசத்துக்குத் தேசம், கண்டத்துக்குக் கண்டம் பயணிகளைக் கொண்டுசெல்ல உருவானது. மாதக்கணக்கில் நடைபெற்றுவந்த பயணம் மிக உல்லாசமாக மணித்தியாலங்களில் முடிகின்றது.

இதற்கு நேர்மாருக இன்று தேசத்துக்குத் தேசம், நாட்டுக்கு நாடு போராடும் பெருமுயற்சிக்கு இச்சேவை உதவுமென்பது கண்டுபிடிப்பில் காணப்படவில்லை.

மண்ணில்தான் போர் என்ருல் அது விண்ணில் பரவியதும் இக்கலிகாலத்தின் அபிவிருத்தி; இந்தநிலை மாற மனித உள்ளத்தில் அடிப்படை மாற்றம் அவசியம்.

மேக மண்டலத்துக்கு மேலே பறக்கும் விமானத்தில் பயணிகள் எண்ணத்திலும் மிக உயரமானவர்கள் என்ருல் விமானத்தைப் போல் பாதுகாப்பாகச் செல்லும் இடத்தை வந்தடைவர்.

யாழ்ப்பாணக் கோட்டையின் வரலாறும் இதுபோன்றது.

போத்துக்கேயர் கட்டிய கோட்டை உலகில் காண முடியாத, கேட்கமுடியாத அக்கிரமங்களுக்கு இடமளித்தது.

டச்சுக்காரர் ஆட்சியில் திருத்தியமைக்கப்பட்ட கோட்டை உலகின் மிக அழகான வரலாற்றுப் பெருமை பெற்ற கோட்டைகளில் ஒன்றென்று கூறப்படுகிறது. அவர்களின் ஆட்சியில் யாழ்ப்பாண மக்களின் அடிமைத்தனம் சற்றே குன்றியிருந்தது. அவ்வளவுதான்.

பிரிட்டிஷ் ஆட்சியில் அதற்கு "King's House" என்று பெயரிடப்பட்டது. பிரிட்டிஷ் அரசரின் பிரதிநிதியாக மகாதேசாதிபதி யாழ்ப்பாண விஜயத்தில் அங்கு தங்கியிருந்தார்.

சுதந்திர ஆட்சியில் பெயர் மாறவில்லை. இராணியின் ஆட்சியில் 'Queen's House' என்ற மாற்றமும் இருக்கவில்லை. ஜனதிபதி வீடு 'President's House' என்ற மாற்றம் ஏற்படச் சந்தர்ப்பம் சூழ்நிலை இடம்கொடுக்கவில்லை.

இளவரசர் சார்ல்ஸ் பிரட்டிஷ் அரசராக முடி சூட்டப்பட்டால் 'King's House' என்ற கருத்துப்படுமா?

பெயர்ப் பலகைகளில் என்ன என்று ஏளனம் செய்வது எப்போதும் சரியாகாது. இன்று இங்கு வாழும் தமிழர்களுக்குச் சுதந்திர வாழ்வு கிட்டாததையே இந்தப் பண்டைய பெயர் குறிக்கின்றது.

இலங்கை ராணுவம் அங்கு குடிகொண்டிருப்பது எதிரியிலிருந்து இப்பகுதியையும் மக்களையும் பாதுகாக்கவா?

இந்த அடிப்படையில் நாம் சிந்திக்கத் தொடங்கிஞல் இன்று இங்கு மட்டுமல்ல உலகில் பல இடங்களிலும் நடைபெறும் நாசவேலைகளின் ரகசியத்தை ஓரளவிற்காவது புரியமுடியும்.

நானே தலைவன்; நானே அரசன், என்சொல்லின்படி எதுவும் நடக்கவேண்டும் என்ற மமதை அளவு கடந்த நிலையில் தலையெடுத்திருக்கிறது. வீட்டிலும், சமூகத்திலும், நாட்டிலும், குடும்ப விவகாரங்களில், சமூக அமைப்புக்களில், ஊர் நடவடிக்கைகளில், தேசத்தின் அரசியலில், சர்வதேசத் தொடர்புகளில் எங்கும் இது வியாபித்திருக்கிறது.

எனவே குண்டுகள். துப்பாக்கிகள், கண்ணிவெடிகள் நுட்பமான உயிர்கொல்லிகள் இந்த அழிவுப் போட்டியில் பங்குபற்றுகின்றன.

இவற்றிற்கெல்லாம் என்ன மாற்று மருந்து எம்முடன் இருப்பதாக வாசகர் சிலர் கருதுவதை நாம் படித்திருக்கிருேம்.

அது ஒரு கிண்டல், ஒரு விதமான வயிற்றெரிச்சல். அந்த எரிச்சல்தான் இவ்வித நாசவேலைக்கு அத்திபாரம்.

தலைவர்கள் அனைவரும் அனுமதேயமயமான சேவையில் தங்களை மாற்றியமைக்க முடியுமானுல் குண்டுகள் வெடிக்காது, துப்பாக்கிகள் சுட மறுக்கும், விமானத்தின் வெவ்வேறு பாகங்கள் ஒருங்கிணைந்து வேலைசெய்யும், ராணுவம் நாட்டைப் பாதுகாக்குமளவிற்கு தன்னைக் கட்டுப்படுத்தும் ஆபிரிக்கத் தலைவர் யூலியஸ் நைரேரே கதையைப் படித்தோமல்லவா.

இவ்வித சிந்தனையால் தூண்டப்பட்ட ஆசாரியர் ஒருவர் தன்னை ஒரு அடிமையாக்கி சந்தையில் விலைக்கு விற்கப்பட்டு, தம்முடைய எஜமானுக்குத் தொண்டு செய்து, அவருடைய ஆசிபெற்ற சமயத்தில் தமது சுயரூபத்தை வெளிப்படுத்திஞர் என்றொரு கருத்துடைய கதை உண்டு.

அதனை அறிந்தஎஜமான், அவருடைய காலில் வீழ்ந்து வணங்கி தன்னையும் திருத்திக்கொண்டாராம்.

அடிமைத்தனம் ஒழிய தலைவர்கள் எந்த நிலையிலும் தமது மமதை ஒழிய அநாமதேய சேவையில் தங்களைக் கட்டுப்படுத்துவார்களாக. இதுவே நாசவேலை நிறைந்திருக்கும் இவ்வுலகில் அது ஒழிவதற்கு அவசியமான தேவை.

## மரம் நடுவதால் மக்கள் பொருளாதாரம் வளர்கிறது

வருடந்தோறும் அபிவிருத்திக்கான திட்டங்களின்கீழ் காடுகள் ஏராளமாக அழிக்கப்படுகின்றன. பொதுஸ்தாபனங்களுக்கும், கட்டிடவேலைகளுக்கும், தனிநபருக்கும் பிற தேவைகளுக்குமாக பெருவாரிவாரியான மரங்கள் தேவைப்படுகின்றன, காடுகளிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் ஏராளமான மரங்கள் விறகுகளுக்காக தினந்தோறும் வெட்டப்படுகின்றன. மேற்கூறிய செயல்களினுல் மரங்களின் எண்ணிக்கை விரைவாகக் குறைவடைவதால் இவற்றை ஈடுசெய்ய திட்டமிட்ட மரநடுகைச் செயல்கள் அவசியமாகும்.

காடுகள் அழிக்கப்படுவதினுல் காலநிலையில் மாற்றம் ஏற்படுகின்றன. இதனுல் விவசாயமும் சூழலும் பாதிப்படைகின்றன. இப்பாதிப்பைத் தவிர்க்கவே அரசாங்கமும, தனியார் துறைச் சிந்தனையாளர்களும் மரநடுகையைத் துரிதப்படுத்தி ஊக்கம் கொடுத்து வருகின்றுர்கள்.

வன பரிபாலன இலாகா அழிக்கப்பட்ட காடுகளிலும், புற்றரைகளிலும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த காட்டு மரங்களான முதிரை. தேக்கு, சவுக்கு, வேம்பு, சஞ்சீவி. வாகை, மலைவேம்பு, கற்தேக்கு, புன்னை போன்றவற்றைத் திட்டமிட்டு வருடந்தோறும் நடுகின்றுர்கள் அத்தோடு மேற்கூறிய மரங்களின் நாற்றுக்களை மக்கள் தமது காணிகளில் நிழலுக்காகவும், விறகுக்காகவும், கட்டிட தேவைகளுக்காகவும் நடுவதற்கு விற்பனை செய்கின்றுர்கள்.

விவசாய இலாகாவும், தனியார் துறை நாற்றுமேடையாளர்களும் பழமரங்களான மா, கலா, தோடை, எலுமிச்சை, நெல்லி, கொய்யா, மாதுளை, விளாத்தி, வேம்பு. திரரட்சை கன்றுகளும் மற்றும் புளி, தென்னை, மரமுந்திரிகை. அகத்திக் கன்றுகளும் விற்பனை செய்கின்றுர்கள்.

எங்கள் மக்களுக்குச் சமூக சேவை செய்துவரும் மில்க்வைற் ஸ்தாபனம் மேற்குறிப்பிட்ட மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி வருகின்றது.

மரங்கள் நடுவதனுல் மக்களின் பொருளாதாரநிலை உயர்கின்றது. உதாரணமாக நன்ருகப் பராமரிக்கப்பட்ட ஓர் வேப்பமரத்தின் பெறுமதி 20-25 வருடங்களில் ரூபா 5,000/- ரூபா 10,000 ஆகும் ஓர் மலைவேம்பின் பெறுமதி ரூபா 20,000/- - 25,000/' ஆகும். பழமரக் கன்றுகளும் அவற்றின் காய். கனிகளைவிட மரத்தின் பெறுமதிகளுமுண்டு. காய் கனி தரும் பழமரங்களின் பிரயோஜனத்தை நாம் எல்லோரும் உணர்ந்துள்ளோம். உங்கள் உடல்நலத்திற்குத் தேவையான புரதம், உயிர்ச்சத்துக்கள், கனிப்பொருட்கள் முதலானவை பழமரங்களில் இருந்து உமக்குக் கிடைக்கின்றன. எமக்குப் பலவகை மருந்து மூலிகைகளும் மரங்களிலிருந்து கிடைக்கின்றன. மரங்கள் மண்ணரிப்பைத் தடை செய்கின்றன. காற்றினுல் பயிர்களுக்கு வரும் சேதத்தைத் தடைசெய்கின்றன. சில மரங்களின் இலை தழைகள் பசுந்தாட் பசளையாகப் பயன்படுகின்றன. இப்படியாக மரங்களின் பிரயோசனம் அனந்தம்.

மக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்து எங்களுக்காகவும், எங்கள் சந்ததியினருக்காகவும் இந்த மழை வீழ்ச்சியைப்பயன்படுத்தி தகுந்த இடங்களில் உகந்த மரங்களைத் தெரிவு செய்து கட்டாயமாக நட வேண்டும்.

—ச. கிருஷ்ணபிள்ளை,
உ. வி. பணிப்பாளர்.

## பிள்ளையார்கதை



ஔவையின் உதவி இன்றி இலக்கணசுந்தரி விரதமிருக்கவும் முடியாது. இவ்வுண்மையை நாம் உணரும் வகையிலேயே தன் தீவினையையும் தீர்வையும் அறிவதற்காக சாணம் நீர் என்பன எடுத்து நிலத்தைப் புனிதப்படுத்த இயலாது இலக்கணசுந்தரி அவதிப்பட்ட நிகழ்ச்சி சொல்லப்பட்டுள்ளது

உணவு நியமனத்தைக் கடைப்பிடித்தும் விநாயக வழிபாடு செய்தும் ஔவை வாயிலாக பிள்ளையார் கதைகள்-தத்துவங்கள் - பெருமைகளைக் கேட்டும் விரதமிருந்து இலக்கணசுந்தரி விநாயகர் அருள் பெற்ருள்.

சைவசமயத்தில் மட்டுமன்றி உலகில் உள்ளபெரும்பான்மையான சமயங்கள் கூறும்முறையில் குருமாருக்கு இன்றியமையாமையையே இலக்கணசுந்தரிக்கு உதவிய ஔவையின் செயல் உணர்த்துகின்றது.

தகுதியான குருவை அடையாவிட்டால் குருடனுக்கு குருடன் வழிகாட்டுவதுபோல் இருக்கும் என்றும் திருமூலர் வாக்கை மறவாதிருப்பதோடு நல்லகுருவை அனைவருக்கும் கிடைக்கச்செய்பவர் விநாயகர் என்பதையும் இலக்கணசுந்தரி ஔவையை அடுத்த நிகழ்ச்சியில் இருந்து உணரவேண்டும். ஓங்கார ரூபியான-ஞானமுதல்வராகஉள்ள விநாயகவழிபாட்டால் குருவாக உள்ளவர் தமக்குரிய தகுதியை அடையலாம். நல்லகுருமாரை அடையவிரும்புபவர்களும் விநாயக வழிபாடு செய்வதால் நல்ல குருவை அடைவதோடு அவரால் தீவினை தீர்த்து நல்லருள் பெற்று இறையருள்பெறலாம்.

அருளாளன்

## "எந்தவொரு பதவிக்கும் கல்வியே அத்திவாரம்"

[கண்டி]

ஒருவர் எந்தவொரு பதவியை வகித்தாலும் அப்பதவிக்கு அத்திபாரமாக அமைவது கல்வியே ஆகும். அத்தகைய கல்வியைக் கற்பிப்பவர் ஆசிரியர். இந்த வகையில் ஆசிரியர்களின் சேவை மகத்துவமானது.

இவ்வாறு கிராசம பயிற்சிக் கல்லூரியில் புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான மூன்றுவாரகால சேவை முன் பயிற்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கல்லூரி அதிபர் குறிப்பிட்டார்.

இப்பயிற்சிக்கு 164 ஆசிரியர்கள் தெரிவாகியிருந்தனர், பயிற்சியில் விரிவுரைகளை நிகழ்த்துவதற்காக யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சிவானந்தன், சங்கீத பாட வட்டாரக் கல்விஅதிகாரி திரு. கணபதிப்பிள்ளை, கல்விச் சேவை ஆணைக்குழுவிலிருந்து செல்வி சொர்ணு நவரட்ணம் உட்பட 31 விரிவுரையாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் அநேகமானோர் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அதிபர் தொடர்ந்து பேசுகையில் ஆசிரியர்த் தொழுல் கௌரவமானது மட்டுமல்ல, புனிதமானதும் கூட, அத்தகைய தொழிலைச் சேவை அடிப்படையில் செய்து நமது எதிர்கால சந்ததியினர்களுக்குச் சிறந்த முறையில் கல்வி புகட்டி நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்குவதில் ஆசிரியர்கள் முன்னின்று உழைக்கவேண்டுமெனச் கேட்டுக்கொண்டார்.

புதிதாக நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு இப்பயிற்சியை நடத்துவதற்கான காரணங்களை விளக்கிய அவர் இப்பயிற்சி அடிப்படை நோக்கங்களுள் ஒன்று நாட்டின் பல்வேறுபட்ட சமூகங்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்துவதாகும். என்ருர். விரிவுரையாளர்கள் பலரும் சொற்பொழிவாற்றிஞர்கள். [ச]

## பொன்னலை ஸ்ரீ வரதராஜர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

பொன்னலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் மார்கழித் திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

வைகுண்ட ஏகாதசி தினமான 9 ம் திருவிழா 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யன்று அதிகாலை விசேட பூசையும் பகல் தேர்திருவிழாவும் இரவு ஏகாதசி புராணபடனமும் நிகழும்.

10ஆம் திருவிழாவன்று காலை தீர்த்த திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நிகழும்.

[பொன்னலை [வரதராசப் பெருமாள் கொடியேற்றம்]

## துன்பங்கள் தீர்த்து அருள்வாய்!

பொன்னு லைவரத ராஜப் பெருமாளே!
என்னுலை யாவதொன்றும் ஈங்கில்லை-நின்னலை
தீருமே யன்றியெங்கள் தீராப் பிரச்சினைகள்
ஆருமே தீர்க்காரே ஆம்.

★ ★ ★

வன்செயல்கள் கொள்ளை வழிப்பறிகள் அன்றியிங்கு
இன்செயல்கள் எள்ளளவும் இல்லையையா!
-புன்செயலோர்
சுட்டுப் பொசுக்கிருர்; தூயவரை வாட்டுகிருர்;
கட்டுப்பா டில்லையே காண்!

★ ★ ★

ஆர்க்கும் அடங்கா அறத்தமிழர் துன்பமதைத்
தீர்க்க அருள்வாய் திருமாலே!-பார்த்துநீ
வாளா விருந்தால் வாடிவருந் துந்தமிழர்
வாழாரிவ் வையத்து மண்.

'கவியரசு'
-முருகசூரியன்

## 'லலித்' கூற்றுக்கு 'சிவா'...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தினர் நடத்தும் அட்டூழியங்களுக்கு தீவிரவாதிகள் மீது பழியைப் போட முயற்சிக்கிறுர் அவர்.

அப்பாவித் தமிழர்கள் கொலைசெய்யப்படுவது வீடுகள் எரிக்கப்படுவது கிராமங்கள் முழுமையாக எரித்து நாசமாக்கப்படுவது, பெண்கள் கற்பழிக்கப்படுவதுயாவும் தமிழ்த் தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு எதிர்நடவடிக்கையாகவே ராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்றன வென்கின்றுர் அவர். துரதிருஷ்டவசமாக இலங்கை ஜனுதிபதி திரு. ஜயவர்த்தன பத்திரிகை யொன்றுக்கு விடுத்துள்ள பேட்டி யொன்றில் உண்மையை வெளியிட்டுள்ளார். முதலில் ஏனைய மாகாணங்களை முடித்துக்கொண்டு யாழ்ப்பாண ப்பிரச்னையை அணுக போவதாக அவர் கூறியிருக்கிறுர். யாழ்ப்பாணத்துக்கான உணவு விநியோகத்தை எம்மால் நிறுத்தி விட முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் அமைதி நிலவுகிற தென்றுல் கிழக்கு மாகாணத்தில் இலங்கை ராணுவம் தனது நடவடிக்கைகளை முடித்துக் கொண்டு இங்கு முற்றுகை யிடுவதற்கு ஆயத்தமாகி வருகின்றது என்பதையே காட்டுகின்றன.'' இவ்வாறு திரு. எம். சிவசிதம்பரம் சென்னையில் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறுர்.

உஷாமினி
10-30, 2-30, 4-45, 6-45
COMMANDO-2

எம்பயர்
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
மோகன் - மாதவி
நிரபராதி

லிடோ சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
தனி மரம்
13 முதல்
JAWS-III

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
சிவாஜி - K. R. விஜயா நடித்த
எதிரொலி
17-ந் திகதி முதல்
TEN BROTHERS OF SHAOLIN TEMPLE
(Latest Karate)

## நடவடிக்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சு)

கையில், ''யுத்தம் யுத்தம் என்று பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் பேசப்படுகிறது. அடுத்தவருடம் யுத்த ஆண்டாக பிரகடனப்படுத்தப் படவேண்டு மென்றும் பேசப்படுகிறது. இவ்விதமாகப் பேசுவதைவிடுத்து இனப் பிரச்னைக்கு யதார்த்தமாகத் தீர்வுகாண வேண்டும்'' என்று வேண்டுகோள் விடுத்தார்.

இருபத்தைந்து மாவட்டங்களிலும் தமிழ் மொழிபெயர்ப்பாளர்களும்] தட்டெழுத்தாளர்களும், நியமனம் செய்யப் படவுள்ளதாகவும் அடுத்த மாதத்தில் நியமிக்கப்படவுள்ள இவர்கள் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் கடமையாற்றுவார்கள் என்றும் அமைச்சர் செ. இராசதுரை நேற்று பாராளுமன்றத்தில் கூறினுர். (ய)

## சீறிப்பாயும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'சீறிப்பாயும்சிலிண்டர்குண்டு' என்று புலனுவுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். இக்குண்டுகள், காட்டுப் பகுதியில் வீதியோரமாகக் கண்டு பிடிக்கப்பட்டன.

## சுழிபுரத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலைசெய்து வந்தவர்கள் என்றும், கடந்த வாரம்தான் அங்கிருந்து தங்கள் சொந்த ஊருக்கு திரும்பியவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கடைகள் மூடப்பட்டிருந்தன. கறுப்புக்கொடிகளும் வெள்ளைக் கொடிகளும் ஆங்காங்கே பறக்கவிடப்பட்டிருந்தன. பல வாகனங்களிலும் கறுப்புக்கொடிகள் இருக்கக் காணப்பட்டன.

இறந்த மூன்று இளைஞர்களினதும் பூதவுடல்கள் அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டன. பூதவுடல்சென்றஇடங்கள் வாழைகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

தகனம் செய்யப்பட்டஇடத்தில் 21 துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு மரியாதை அஞ்சலி செலுத்தப்பட்டதாகவும், அதிகமான பொதுமக்கள் இவ்விறுதிச் சடங்கில் கலந்துகொண்டதாகவும் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் (புளட்) விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆமி ஆமி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தவிபத்தில் இறந்தவரின் தாயாரும் அவரது சகோதரரானவிக்னேஸ்வரன்[15வயது] என்பவரும் காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [க-மா]

## இன்று

(யாழ்ப்பாணம்)

சில்லாலை புனித சூசையப்பர் வாலிபர் சங்கத்தினர், சர்வதேச இளைஞர் ஆண்டை இன்றும் நாளையும் கொண்டாடவுள்ளனர். இவ்விழாவில் அருட்திரு. எ. சி. கிறிஸ்தோபர் அடிகள் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இதனையொட்டி சிறப்பு மலரொன்றும் வெளியிடப்பட்டுள்ளது. (மா)

## ஓராண்டு நினைவஞ்சலி

**சுப்பையா இராஜகஸ்தூரி**

[கஸ்தூரி மாஸ்ரர்]

(பிரபல எலக்ரிக்கல் மெக்கானிக்)



| அன்னைமடியில்: | இறைவனடியில்: | திதி: |
|---|---|---|
| 12-08-1938 | 25-11-1984 | 14-12-1985 |

மாசற்ற அன்புடனும், பாசத்துடனும் எம் குடும்ப விளக்காய் திகழ்ந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டுத் திடீரென மறைந்துவிட்ட அன்புத் தெய்வமே உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:

மனைவி, பிள்ளைகள், சகோதரி, மருமகன், உறவினர்.

175/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [2373]

# கண்ணீர் அஞ்சலி!



செல்லத்துரை



ரவிமூர்த்தி



ஜெகதீசன்

| பிறப்பு: | பாதகர்களால் பறிப்பு: |
|---|---|
| 19-04-1960 | 11-12-1985 |

மண்ணின் மீட்பர்கள் இன்று மண்ணிலே வீழ்ந்தனர்.
கொடிய கரங்கள் இவர்களை கொன்றெழித்தன.
எழுக மக்களே!
முன்னுல் நின்றுகொண்டே முதுகில் குத்துவோரை
இன்னும் நாம் அனுமதிப்பதா?

- நண்பர்கள்.

[2378]

## முல்லை மாவட்ட பிரஜைகள் குழு

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மாவட்டப் பிரஜைகள் குழுகூட்டம் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. நிர்வாகிசளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் அருட்திரு. பொஸ்கோ மரியாம்பிள்ளை, தலைவர் திரு. எஸ். கனகசபை. அதிடர். துணைத்தலைவர்கள்- திரு. ஏ. சென் ஜோர்ஜ வாஷிங்டன், ச. நீ. [புதுநகர்] திரு. பொன். சந்திரசேகரி, அதிபர் (நெடுங்கேணி) திரு. முத்துச்சுப்பிரமணியம் [முள்ளியவளை] இணைச்செயலாளர்கள் திரு. ரி. தியாகராசா ச. நீ,. திரு. பொ. சேதுபதி ச. நீ. பொருளாளர் திரு- மி. அந்தோனிப்பிள்ளை ஜோர்ஜ்.

மாவட்டத்தின் 25 கிராம சேவை அலுவலர்கள் பிரிவுகளின் பிரஜைகள் குழுக்களின் தலைவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.


மேற்கு ஜேர்மனி,
பிரான்ஸ், இத்தாலி

ஆகிய நாடுகளுக்கு உங்களை எமது பிரதிநிதி இங்கிருந்து

December 26-ந் திகதி

அழைத்துச்செல்வார்.

மற்றும்

பாஸ்போட், போண்ட், விசா

என்பவற்றுக்கும்

டொக, அபுதாபி

செல்ல விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்:

லிப்ருஸ் லிமிட்டெட்

R. G கட்டடம், 70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

NO. 60, SEA BEACH ROAD, PETTAH. TEL. NO. 29148



JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

Engineering Council Examination (London)

PART-I MAY 1987

லண்டன் பொறியியல் குழுவினரால் 1987-ம் ஆண்டு வைகாசி மாதம் நடாத்தப்படும் பகுதி I பரீட்சைக்கு மாணவர்களை தயார் செய்ய முழுநேர வகுப்புகள் தை மாதம் 8-ந் திகதி ஆரம்பமாகின்றன.

க. பொ. த. (சா) 6 பாட சித்தியும், க. பொ. த. (உ/த) 2 பாடச் சித்தியும் (Maths and Physics) உள்ள 22 வயதுக்குட்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விசேஷ ஆங்கிலப் பாடமும், பொறியியல் வரைதலும், ஆய்வுக்கூட பரிசோதனைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மூன்று தவணைகளில் தலா (18 கிழமைகள்) பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படும். தவணைக்கு ரூபா 1,000/- விபரங்கள் அடங்கிய கைநூலும் விண்ணப்பப் பத்திரமும் ரூபா 20/- காரியாலயத்தில் பெற்று 30-12-85க்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

முகவரி:

DIRECTOR,

Jaffna College Technical Institute,

VADDUKODDAI. [2309]


## இடமாற்றம்: பிரிவுபசாரம்

[சுண்டுக்குளி]

யாழ். உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்களத்தில் கடந்த 6 வருடங்களுக்கு மேலாகக் கடமையாற்றி நிரந்தர நியமனம்பெற்று இம்மாதம்முதல் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக்கும் யாழ். மாநகர சபைக்கும் இடமாற்றம்பெற்றுச்செல்லும் செல்வி கு. விஜயலட்சுமி, திருமதி செ. மங்களேஸ்வரி ஆகியோருக்கு திணைக்கள ஊழியர்களால் பிரிவுபசாரவிழா ஒன்றுநேற்று முன்தினம் அளிக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் யாழ். உணவுக்கட்டுப்பாட்ட திகாரி திரு. எஸ். பற்குணம், கணக்காளர் திரு கே. இராசநாயகம், பிரதமலிகிதர் திரு. எம். சந்திரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு இவர்களது சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்கள்.


மீண்டும் இலங்கையில்

லோர்ஸ்பேன்* 40 ஈ.சி

குளோர்பைரிபோஸ் 40%




விவசாயிகளின் முதல் தேர்வு

பூச்சிநாசினி

மனிதருக்கு நச்சுத்தன்மை குறைந்த பரந்து செயலாற்றும் பூச்சி நாசினி:-

நெல், மிளகாய், வெண்காயம், புகையிலை, மரக்கறி,

உருளைக்கிழங்கு போன்ற பயிர்களில் பூச்சி புழு மற்றும் வேரரி எறும்புகளையும் கட்டுப்படுத்தும்.

100 மி.லீ. - ரூ. 55/-
200 மி.லீ. - ரூ. 90/-
500 மி.லீ. - ரூ. 205/-

ANGLO-ASIAN AGRO CHEMICALS

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட், சாற்றட் வங்கி கட்டிடம், கொழும்பு-1.

TEAM

* அமெரிக்க டௌ கெமிகல் ஸ்தாபனத்தாரின் வர்த்தக சின்னம்.


## இன்றைய பலன்

மாதம்- கார்த்திகை
திகதி- 29 [14-12-1985]
கிழமை- சனி
திதி- திருதியை
பின்இரவுவரை
நட்சத்திரம்- பூராடம்
முற்பகல்வரை

மேடம்- வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும். புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள். புத்திர வழியால் புதினமும் உண்டு.

இடபம்- பணம் பலவழிகளாலும் செலவாகும். அந்நியர் ஒருவரால் ஏமாற்றம் அடையக்கூடும். பிரயாணத்தின்மூலம் பொருள் நழுவக்கூடும்.

மிதுனம்- புதுமையானஎண்ணங்களால் உந்தப்படுவீர்கள். உடலில் தனி உற்சாகம் பிறக்கும். மற்றவர்கள் உங்கள் ஆற்றலை மெச்சுவர்.

கடகம்- சிந்தனையில் குழப்பம் ஏற்படும். மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம். செலவுகள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும்.

சிங்கம்- எதிர்பாராத திருத்தங்கள் இன்று வாழ்க்கையில் புதிய மாற்றங்களை உருவாக்கும் பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும்.

கன்னி- புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும். கூட்டு வியாபாரத்தில் சிலரது கவனம் திருப்பப்படலாம். முன்னேற்றமும் உண்டு.

துலாம்- வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

விருச்சிகம்- வாழ்க்கையில் புதிரான நிலைதென்படும். ஆத்திரப்படுவதன்மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படும்.

தனுசு- இனபூசலின்மூலம் இதயபாரம் ஏற்படும். திடீர் முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள். எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றவும்.

மகரம்- தன்மான வாழ்வு இன்று தாராளமாகக் கிடைக்கும். நீண்டநாள் கடன்நிவர்த்தியாகும். வியப்பூட்டும் செய்திக்கும் இடமுண்டு.

கும்பம்- குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம். பொறுமையே நன்று.

மகரம்- அறவழியில் நாட்டம் பிறக்கும். குடும்பத்தில் சுமுகமானநிலை தென்படும். எதிர்பார்த்த காரியம் ஒன்றுக்கு இன்று வழிகோலப்படலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

# இப்படியும் நடக்கிறது

பி. பி. ஸி. பற்றி புதிதாக நான் உங்களுக்கு எதுவும் கூறத்தேவையில்லை. சுடச்சுடச் செய்திகளை இன்று நமக்குத் தருவது பி. பி. ஸி.தான்.

பி. பி. ஸி. தமிழோசையில் நீண்ட காலமாக ஒலித்த குரல்கள் இரண்டு. ஒன்று சங்கர், மற்றையது ஆனந்தி. ஆனால் இன்று பல குரல்கள். அதுவும் நம்மவர்கள்.சற்றுப் படியுங்கள்.

வாரத்தில் ஐந்து நாட்கள் திங்கள் முதல் வெள்ளிவரை இலங்கை நேரப்படி இரவு 9-45 மணிமுதல் 10-15 மணி வரையும் சிற்றலை 25, 41, 49 மீற்றர்களில் பி. பி. ஸி. ஒலிக்கின்றது. அறிவியலுக்கும் இலக்கியத்திற்குமே தமிழோசை முன்னர் அதிகநேரத்தைச் செலவிட்டு வந்தது. இப்பொழுது 20 நிமிடங்களுக்கு மேல் அரசியல் செய்திகட்கும், விமர்சனங்கட்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாரம் அறிமுகமான குரல் திரு. ஏ. தாசீசியஸ் உடையது. தாசீசியஸ் தரமான நாடகக் கலைஞர். அவரின் 'ஒடி விளையாடு பாப்பா' என்ற நாடகத்தை யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்கள் இன்றும் பாராட்டுவார்கள் பாடநூற்குழுவில் பணியினைத் தொடங்கிய இவர் பின்னர் யாழ். மத்திய கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராசப் பணியாற்றி, நைஜீரியாவில் ஆசிரியப் பணியினை மேற்கொண்டு இம்மாதம்முதல் பி. பி. ஸி. நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் அறிவிப்பாளருமாக அறிமுகமாகியுள்ளார்!

ஆனந்தி சூரியப்பிரகாசம், விமல் சொக்கநாதன், எஸ். பி. செல்வநாயகம், ஜெயலட்சுமி, ஏ. தாசீசியஸ் ஆகியோர் இலங்கையைச் சேர்ந்த பி. பி ஸி. தமிழோசை அறிவிப்பாளர்கள். இவர்களைவிட சங்கர் அவர்களுடன் கீதா-பாலா, மைதிரேலி கணேசன் ஆகியோரது குரலும் தமிழோசையில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. வாழ்க தமிழோசையின் அளப்பரிய சேவை (தகவல்: அறிவழகன்)

"ஊடுருவி"

# அரியாலை சம்பவம்; 'புளொட்' விளக்கம்!

[யாழ்ப்பாணம்)

''விசாரணை செய்வதற்காக அரியாலை கிராமத்திற்குச் சென்றோம். விசாரணை செய்ய முயற்சித்தோம். அப்போது எம்மை தமிழீழ மக்சள் விடுதலைக்சழகம் என்பதனை அறியாத அவர்கள் வெளியே போகச் சொல்லி எம்மைத் தாக்க வந்தனர். நாம் அவர்களை அடையாளம் கண்டு உடனே நாங்கள் 'புளொட்' என்று கூறினேம். அவர்கள் மீண்டும் பேசிக் கொண்டு எம் தோழர்கள்மேல் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனுல் எம்தோழர்கள் ரவி மூர்த்தி, ஜெகதீசன், செல்லத்துரை (பண்டா-சலிம்) மரணமானுர்கள்!

தமிழீழ மக்சள் விடுதலைக் கழகம் நேற்று வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

அரியாலைக் கிராமத்தில் நீண்டகாலமாக குருமண் சட்டவிரோதமான முறையில் களவாடப்பட்டுவந்தது.அத்துடன் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த அணையும் மண்ணுக்காக வெட்டி எடுக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளது. இதனுல் மண்ணரிப்பு ஏற்பட்டு கடல்நீர் இப்பிரதேசத்தினைச் சூழ்ந்துள்ள வயல்களை அழித்துவருகின்றது. இம்பிரச்னை நீண்டகாலமாக பலரால் கதைக்கப்பட்டும், கண்டிக்கப்பட்டும்கூட இச்சட்டவிரோத நடவடிக்கை நிறுத்தப்படவில்லை. இதன்பின் இதுசம்பந்தமான பூரண ஆய்வை மேற்கொண்டு மண்ணெடுத்தல் தொடர்பாக கட்டுப்பாட்டை மேற்கொண்டோம். அதனேடு இப்பிரதேச வீதி பராமரிப்பு சம்பந்தமாகவும் நாம் அதிக அக்கறை செலுத்தினேம்.

இவ் நடவடிக்கைகளைஅடிக்கடி ஒருவர்மீறிவந்தார். மண் எடுத்தல் சம்பந்தமாகவும், மற்றும் திருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வீதிசளினூடாக மண்ணுடன் வர வேண்டாம் எனவும் பல முறை இவரிடம் நாம் கேட்டிருந்தோம். திருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வீதியினூடாக கசன்ருர் கட்டப்பட்டுக்கொண்ருக்கும் பாலம் மண் சுமையினுல் சேதமடைந்து வருமென்றும் கூறியிருந்தோம். 11-ந் திகதி மாலை எமது கோரிக்கையை மீறி மண்ணுடன்இரைருடையசாரதி வந்தார். நாம் மீண்டும்விளக்கம் அளித்து மண்ணுடன் செல்லவேண்டாம் எனவும், மண்ணை நீக்கிவிட்டு உழவு இயந்திரத்தினைக் கொண்டு செல்லுங்கள். ஒரு வாரத்தின்பின் எமது வேலைசள் முடிந்துவிடும். அதன்பின் மண்ணை ஏற்றுங்சள் என்று கூறினேம். அச்சாரதியும் இதனை ஏற்றுக்கொண்டு செயற்பட்டார். இந்நிகழ்ச்சி நடைபெற்று ஒருசில நிமிடங்களின் பின் உரிமையானரின் சகோதரன்வந்தார். அவர் எங்களை தகாத வார்த்தைசளால் படுமோசமாக பேசி மண்ணைக் சொண்டுசெல்லமுற்பட்டார். இதை எமது அரியாலை கிழக்கு அமைப்பாளர் தடுத்தார். உடனே இவர் எமது தோழரை படுமோசமாகத் தாக்கினுர். உடனே நாமும் தற்காப்புக் சாரணமாக கைகளால் தாக்கினேம். அப்போது அவர்கத்தியுடன் வந்து எமது தோழர்சளை வெட்ட முற்பட்டார். இந்த நடவடிக்கையினுல் எமது தோழர் ஒருவரின் கைவெட்டப்பட்டது.

இதன்பின் அவர்களை விசாரணை செய்வதற்காக அரியாலைக் கிராமத்திற்குச் சென்ருேம்.

அங்கு சென்று விசாரணை செய்ய முயற்சித்தோம். அப்போது எம்மை தமிழீழ மக்கள் விடுதலைக் சழகம் என்பதனை அறியாத இவர்கள் வெளியே போகச் சொல்லி எம்மைத் தாக்க வந்தனர். நாம் அவர்களை கண்டு உடனே புளட் என்று கூறினேம். அவர்சள் மீண்டும் பேசிக்கொண்டு எம்தோழர்கள் மேல் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனுல் அவ்விடத்திலேயே எமது தோழர்களான ரவிமூர்த்தி, ஜெகதீசன், செல்லத்துரை (பண்டா-சலீம்) ஆகியோர் மரணமானுர்கள்.

## சேவையில் திளைத்த செம்மல்

நிமர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும் பூமியில்யார்க்கும் அஞ்சாத நெஞ்சமும், திருநீற்று நெற்றியும், செம்பவளவாய்ப் புன் சிரிப்பும், இன்சொல்லும், எளிமையும், எவரையும் வரவேற்று உபசரிக்கும் நற்பண்பும் நிறைந்து 'போற்றுபவர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுபவர் தூற்றட்டும், தொடர்ந்து செல்வேன்! ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்ருல் எடுத்துரைப்பேன், எவர் வரினும் நில்லேன் அஞ்சேன்!! என்ற கவிஞர் கண்ணதாசனின் கவிதைக்கேற்ப வாழ்ந்து மறைந்தவர் தான் அல்லைப்பிட்டி தந்த பெருமகன் அமரர் வைத்திலிங்கம் சபாரத்தினம் அவர்கள்.

அமரர் சபாரத்தினம் அவர்களின் தலைமையின் கீழ் இயங்காத எந்தவொரு சங்கமோ, சபையோ அல்லைப்பிட்டியில் இருந்ததில்லை. அல்லைப்பிட்டி-மண்டைதீவு கிராமசபை உறுப்பினராக இருந்துஅல்லைப்பிட்டி - மண்கும்பான் கிராமங்களுக்கு தனியான தொரு கிராமசபை உருவாக பாடுபட்டார். பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவராக இருந்து அல்லைப்பிட்டியிலே சிறந்த தொரு கூட்டுறவுச்சங்கத்தை உருவாக்கி வழி நடத்தினுர். கிராம முன்னேற்றச்சங்கத் தலைவராக இருந்து ஒரு நெசவு நிலையத்தை நிறுவ அரும்பாடுபட்டார். பெற்றேர் ஆசிரியர் சங்கத்திலிருந்து அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலையின் உயர்வுக்காக உழைத்தார். ஐக்கிய நாணய சங்கத்தலைவராகவிருந்து இப்பகுதி ஏழைக் கமக்காரர்களின் இன்னல்களைப் போக்கினுர். பயிர்ச் செய்கைக் குழு தலைவராக இருந்து விவசாய நிலங்கள் வெள்ளத்தினுல் பாதிக்கபடுவதைத் தடுக்க பல வாய்க் கால்களை அமைத்தார். சிரமதானத் தொண்டராக இருந்து அல்லைப்பிட்டி - மண்கும்பான் ஊர்மனை ஊடாக பிரதான வீதி அமைக்க அல்லும் பகலும் உழைத்தார். இறைபணியில் ஈடுபட்டு அல்லைப்பிட்டி சொக்குளக்குப்பதி மூன்று முடி அம்மன் கோயில் பரிபாலன சபைத் தலைவராக இருந்து பாழடைந்த நிலையிலிருந்த கோயிலைப் புனருத்தாரணஞ்செய்து கும்பாபிஷேசம் செய்யும் நிலைக்கு கொண்டு வந்தார். அதுமட்டுமா அரசுசேவை! இல்லை, தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் சேர்ந்து, அல்லைப்பிட்டி கிளைத்தலைவராகவும் இருந்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டங்களிலும் தமது பங்களிப்பை செலுத்தினுர். இத்தகைய பெருந்தகை இன்று எம் பத்தியில் இல்லை. இன்று அவரது சிராத்த தினமாகும்.

''வையத்து வாழ் வாங்கு வாழ்பவன் - வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'' என்ற பொய்யா மொழிப்புலவரின் வாக்கிற்கிணங்க தெய்வத்துள் கலந்து விட்ட அமரரின் சேவையை நினைவு கூர்வதும் அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து செய்து முடிப்பதுமே அவரது ஆத்ம சாந்திக்கு நாம் செய்யும் கைமாருகும்.

"வீகேரி"

## பாராட்டு

[யாழ்ப்ப ணம்]

யாழ் கொட்டடிப்பகுதி கிராமசேவை அலுவலர் திரு. மனுவல் ஆரோக்கியநாதனுக்கு கொட்டடி மீனுட்சி அம்மன் மாதர் சங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

அண்மையில் பெய்த பெருமழையினுல் கொட்டடிப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளச் சேதங்களை நேரில் பார்வையிட்டும். பாதிப்புற்றவர்களுக்கு ஆறுதல் அழித்தும் மனிதாபிமான சேவை புரிந்த இக் கிராமசேவை அலுவலரின் கடமையுணர்வுக்கும் சேவை மனப்பான்மைக்கும் சங்கம் பாராட்டும் நன்றியும் தெவித்துள்ளது.

## வீரன்

ரவீந்தர், இளவரசி

நியூ விக்ரேஸ், யாழ்ப்பாணம்.

## 31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி அன்னராணி தேவசகாயம்

(கோண்டாவில்)

தாயின் மடியில்: 24-10-1938

ஆண்டவன் அழைப்பில்: 14-11-1985

எங்கள் குடும்ப குலவிளக்காய், ஒளி விளக்காய் விளங்கி உங்கள் வாழ்வின் உயர்வும், சிறப்பும் உங்கள் நற்குணப் பெருமையால் அமைதல்வேண்டுமென்று புகட்டி நம் அனைவருக்கும் வழிகாட்டி எல்லோரின் பேரன்புக்குப் பாத்திரமாய் எம் நெஞ்சத்தில் நீங்காத இடம்பெற்ற எங்கள் அன்புத்தெய்வமே! மின்னுமல், முழங்காமல் மறைந்தீர்? இன்றே உம்மை எண்ணிக் கலங்குகின்றோம். உம் ஆத்மா சாந்தியடையட்டும்.

உன் பிரிவால் வாடும்:

அன்புக்கணவன், பிள்ளைகள், பெற்றோர், சகோதரர், உறவினர்கள்.

பலாலி ரோட், கோண்டவில், கிழக்கு, கோண்டாவில்.


(2368)

## ஓராண்டு நினைவஞ்சலி

அழகர்சாமி கிருஷ்ணசாமி

தோற்றம்: 4-05-1935

மறைவு: 12-11-1984



எமது இல்லறஜோதி அணைந்து ஓராண்டு மறைந்தும், உங்கள் அன்பும் நினைவும் எங்கள் உள்ளத்தைவிட்டு என்றும் அணையாது. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவொல் வாடும்:

மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளைகள் (இந்து, கோபி), உற்ருர், உறவினர், நண்பர்கள்.

39/3, மானிப்பாய் ரோட், கோணந்தோட்டம், யாழ்ப்பாணம்.

[2310]

## ஓராண்டு நினைவஞ்சலி

செல்வி செல்லையாபிள்ளை சரோஜராணி

(பட்டதாரி)

மலர்வு: 09-03-1958

உதிர்வு: 25-11-1984

திதி: 14-12-85



அன்பின் தெய்வமே! எம்மையெல்லாம் தவிக்க விட்டுச் சென்று ஓராண்டு கழிந்துவிட்டதே. காலங்கள் மாறலாம். கண்ணீர் வற்றவில்லை. உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் கண்ணீரில் வாடும்:

அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை, உற்ருர், நண்பர்கள்.

திரு. இ. செல்லையாபிள்ளை, சரவணை மேற்கு, வேலணை.

(2303)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# கடத்திய 7 பேரையும் விடுதலை செய்க!

## மன்னார் ஆயரும் மக்களும் உருக்கமான வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நீர்கொழும்பிலிருந்து மடுபதிக்கு யாத்திரிகர்களாக வந்த ஏழு பேரும் அவர்கள் பிரயாணம் செய்த வாகனமும் இனந்தெரியாத நபர்களால் கடந்த திங்கட்கிழமை கடத்திச் செல்லப்பட்டதாகத் தெரியவருகின்றன.

இச்சம்பவம் மன்னார் மாவட்ட கத்தோலிக்க மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தையும் கவலையையும் தோற்றுவித்துள்ளது. கடத்தப்பட்டவர்களை விடுவிக்குமாறு மன்னார் மாவட்ட ஆயரும், மக்களும் குருமாரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவர்கள் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவித்திருப்பதாவது:

'கடந்த திங்கட்கிழமை நீர்கொழும்புப் பகுதியிலிருந்து திருப்பயணிகளாக 7 கத்தோலிக்கர்கள் மடுத்திருப்பதிக்கு வந்ததாக அறிகின்றோம். இவர்கள் திரும்பிச் செல்கையில் மடுறோட்டு வீதியில் வைத்து இவ்வேழுபேரையும் இவர்கள் பயணம் செய்த வாகனத்தையு சில இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றுள்ளார்கள் என்பதை அறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். இவ்விதமான செயல்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் இவர்களின் உயிருக்கு எவ்விதமான ஆபத்துமின்றி மனிதாபிமான முறையில் விடுவிக்க வேண்டுமென பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்'.

# கொள்ளைபோன நகைக்கு நஷ்டஈடு!

[மட்டக்களப்பு]

மக்கள் வங்கியின் காத்தான்குடிக் கிளையில் கொள்ளை அடிக்கப்பட்ட நகைகளுக்குரியவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி மக்கள்வங்கிக் கிளையில் அடகுவைக்கப்பட்டிருந்த நகைகள் கொள்ளைஅடிக்கப்பட்டது தெரிந்ததே. கொள்ளை அடிக்கப்பட்ட நகைகளுக்குரியவர்களுக்கு ஒரு பவுணுக்கு வட்டிகழித்து 2,800 ரூபாவீதம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ய-ம]

# அன்புவழிபுரத்தில் 25 பேர் கைது

(திருகோணமலை)

அன்புவழிபுரத்தில் நேற்று சேனை நடத்திய பொலிசார் 25 பேரைக் கைதுசெய்துள்ளனர்,

## தமிழகத்தில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடலோரப் பகுதிகளும், ஆந்திரப் பிரதேச தெற்கு கடற்கரைப் பகுதியும் பாதிக்கப்படலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

புயல் தாக்கம் ஏற்படும் பட்சத்தில் அதிலிருந்து மீள்வதற்கான சகல தற்பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக தமிழக பாடசாலைகள் யாவும் இன்று மூடப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

[ரா]


# சேப்ரி ரவல்ஸ்

## யாழ். - கொழும்பு - யாழ்.

## சொகுசு பஸ் சேவை

### இன்று முதல்

நடைபெறும் என்பதை பிரயாணிகளுக்கு அறியத்தருகின்றோம்.

★ கொழும்பில் குறைந்த செலவில் சகல வசதிகளுடனும் தங்குவதற்கு ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

[2379]


# "தேசிய இனப் பிரச்னையும் சமூக மாற்றமும்"

## பேராசிரியர் சிவத்தம்பி விளக்கம்

[ஐ. சண்முகலிங்கம்]

"இன்று நமது நாட்டிலே நடப்பது தேசிய இனப் பிரச்னை மட்டுமல்ல; சமூக மாற்றமுமாகும். இதனை உணரத் தவறின் ஈழத்தீர்வும் பிழையானதாகப்போய்விடும். பெற்றுக்கொண்ட உடங்களைத்தமது கைகளிலேயேவைத்துள்ளவர்கள் நாளைய நிலைமைக்கு எப்படி நடந்துகொள்வார்களோ தெரியாது. இந்தியாவில் ஆன்மீக ஒட்டம் பெறப்பட்டபின்புதான் சுதந்திரப்போராட்டம் ஆரம்பமானது" என்று யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற "மனித உரிமைகள் தினம்" கருத்தரங்கில் பேசும்போது யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்டார்.

வண. ஜெயசீலன் அடிகள் தலைமையில் மனித இனங்களின் சமத்துவத்துக்கும், நீதிக்குமான இயக்கத்தினரால் நடத்தப்பட்ட மேற்படி கருத்தரங்கில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தொடர்ந்து பேசுகையில்:

"சாதி அடிப்படையில் நடைபெறும் சமத்துவமின்மையும், பெண்கள்பால் உள்ள அடிமைத்தன முறைகளும் முதலில் அகற்றப்படவேண்டும். இந்தவகையான மனித உரிமைகளை வழங்க அல்லது நடைமுறைப் படுத்த தயங்குகிறவர்கள் மனித உரிமை கேட்டுப் போராட எவ்வளவுக்குத் தகுதியுள்ளவர்களாவர்? புதிய அரசியல் அந்தஸ்து பெற்றுக்கொள்வது மனித உரிமைக் கோரிக்கையாக மாறி வருகிறது. இக்கோரிக்கைக்கான எமது குரல் உண்மையாகவும் நேர்மையாகவும் இருக்கவேண்டும்" என்றார்.

பேராசிரியர் கு. நேசையாவும் இக்கருத்தரங்கில் உரையாற்றினார்.

## இன்று கருத்தரங்கு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் பத்துலட்சம் வீடமைப்புத் திட்டம் பற்றிய கருத்தரங்கு இன்று மன்னார் நகர மண்டபத்தில் அரசாங்க அதிபர் ஜனாப் எம். எம். மக்பூல் தலைமையில் நடைபெறவுள்ளது.

## ரூபவாஹினி

மாலை

- 5-00 செய்திகள்
- 5-05 காட்டூன் [ஆங்கிலம்]
- 5-10 தேகாரோக்கிய நிகழ்ச்சி
- 6-30 செய்திகள் [தமிழ்]
- 7-00 'பிளனட் ஒப் த ஏப்ஸ்
- 8-00 செய்திகள் (சிங்களம்)'
- 8-25 தொலைக்காட்சி நாடகம்
- 9-00 செய்திகள் (ஆங்கிலம்)
- 9-25 நேயர் நிகழ்ச்சி
- 9-50 கிறீன் லைட் மெக்லெயின்ஸ் லோ
- 10-40 ஒளிபரப்பு முடிவு

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389-24126.

## மரண அறிவித்தல்

### திரு. வைத்திலிங்கம் சந்திரசேகரம்

(ஓய்வு பெற்ற மலாயன் பென்சனியர்)

சுதுமலை தெற்கைச் சேர்ந்த வைத்திலிங்கம் சந்திரசேகரம் (ஓய்வு பெற்ற மலாயன் பென்சனியர்) காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், பொன்னம்பலம் (கணக்காளர் மா. ப. ப. நோ. கூ. சங்கம்), கமலாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணசாமி (தந்தி தொலைபேசித் தொடர்பு பொறியியலாளர்), கிருபரத்தினம் (சங்கானை பல. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் சனிக்கிழமை 14-1'-85 (இன்று) பிற்பகல் 1 மணியளவில் நல்லடக்கத்திற்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. பொன்னம்பலம் (மகன்)
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

(2363)

## மரண அறிவித்தல்

### சுப்பையா சதாசிவம்

சுண்டிக்குளியைச் சேர்ந்த சதாசிவம் 13-12-85-ல் காலமானார். இவர் காலஞ்சென்ற சுப்பையா தையலம்மை தம்பதிகளின் அருமை மகனும், சீதைப்பிள்ளையின் அன்புக் கணவரும், பத்மநாதன் (விஜயா ரேடிங் ஏஜென்ஸி, கொழும்பு-11), யோகராஜா [U. K.], பத்மராணி [U. K.], அருணகிரி [U. K.], ரகுநாதன் [U. K], ரதிதேவி [சென்னை], ரேவதி, நர்வேந்தன் [U. K.], யோகாம்பிகை [U. K] ஆகியோரின் அருமைத் தந்தையும், விமலாதேவி வஸந்திரா [U. K.], துரைராஜசிங்கம் [U. K.], லோகநாதன் [சென்னை] ஆகியோரின் அன்பு மாமனும், ரவிசங்கர், அர்சுனா, திருமேனன், ரஞ்சித், திநேஸ் ஆகியோரின் அன்புப் பாட்டனும், காலஞ்சென்ற சிவகுரு, காலஞ்சென்ற பொன்னம்மா, திருமதி பூரணம் இராமலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார், அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'சேய்குன்றம்'
18, விதானை வீதி,
சுண்டிக்குளி.

(2381)

## மரண அறிவித்தல்

### கந்தையாப்பத்தர் நாகம்மா

நாகம்மா காலமாகிவிட்டார். அன்னார் வட்டக்கச்சி வாசியான கந்தையாபத்தரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருநாதன், செல்லத்துரை, சிவசுப்பிரமணியம், தயாளன், காலஞ்சென்ற கருணாநிதி ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சிவசத்தியபாமா, இராசேஸ்வரி, கமலாதேவி, கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-12-85 ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, 15/5, அரசடி ஒழுங்கையில், அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
க. செல்லத்துரை.

(2380)

## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா துரைசாமி

(மலாயன் பென்சனியர் மானிப்பாய்)

மானிப்பாயைச் சேர்ந்த கந்தையா துரைசாமி அகாலமரணமானார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், திருமதி அமரகுலேஸ்வரி கந்தசாமி (ஆசிரியர்), காலஞ்சென்ற சர்வேஸ்வரன், திருமதி இராணி சிவநேசன் (U. K.), திரு. சேதுகாவலர் (D. S. Postal Dept), திருமதி றஞ்சினி (Dr.) இராசபாலேந்திரன் (Australia), திருமதி இராசலட்சுமி சாந்தகுமார் (Australia), திருமதி புனிதவதி ஜனார்த்தனன் (Australia) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. சிவா முத்துலிங்கம் [ஓய்வுபெற்ற விவசாய உதவிப் பணிப்பாளர்], திரு முத்துராசா (ஆலோசனை பொறியியலாளர் மலேசியா) ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரது மானிப்பாய் இல்லத்தில் 14-12-85 (இன்று) சனிக்கிழமை பி. ப. 2-00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர். நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாலைரோட்,
மானிப்பாய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,

(2376)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம் குமாரசாமி

காலஞ்சென்ற டாக்டர் எஸ். பி. குமாரசாமியின் அன்புமனைவியும் காலஞ்சென்ற வி. எஸ். விநாசித்தம்பி தம்பதிகளின் புதல்வியுமான நாகரத்தினம் குமாரசாமி காலமாகிவிட்டார். இவர் செல்வராணி [அபுதாபி], இந்திரமலர், பவளமலர் [U. K.], ராசமலர், சுகிர்தமலர் [U. K.], சங்கீதபூஷணம் புஸ்பமலர், கைலைநாதர் [U. K.], கீதா [U. K.], சிவமலர் [இந்தியா], ஷைலசா [யாழ். பல்கலைக்கழகம்] ஆகியோரின் அருமைத்தாயாரும். சி. சண்முகதாஸ் [அபுதாபி], ஆர். மகாலிங்கம் [U. K.], காலஞ்சென்ற சி. நாகேந்திரா, எஸ். சரவணபவநாதன் ஆகியோரின் மாமியாரும், சதீஷ், உமேஷ், குமரன், கம்சினி, கிருஷாந்தி ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 14-12-85 சனிக்கிழமை 2 மணிக்கு யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை 22, கல்லூரி வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

2382